முழுப்பதிப்புரிமையுடையது

அந்தரங்கமானது

# இலங்கை பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த (சாதாரண தர)ப் பரீட்சை - 2023 (2024)

## 63 - முயற்சியாண்மைக் கல்வி

## புள்ளி வழங்கும் திட்டம்



இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக் கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை - 2023 (2024)**

**63 - முயற்சியாண்மைக் கல்வி**

**புள்ளி வழங்கும் திட்டம்**

பத்திரம் I 01 x 40 = 40 புள்ளிகள்

பத்திரம் II

**வினா இலக்கம் 01**

(i). - 02
(ii). - 02
(iii). - 02
(iv). - 02
(v). - 02
(vi). - 02
(vii). - 02
(viii). - 02
(ix). - 02
(x). - 02

Q1 = 20 புள்ளிகள்

**வினா இலக்கம் 02**

(i). - 02
(ii). - 02
(iii). - 02
(iv). - 02
(v). - 02

Q2 = 10 புள்ளிகள்

**வினா இலக்கம் 03**

(i). - 02
(ii). - 02
(iii). - 02
(iv). - 02
(v). - 02

Q3 = 10 புள்ளிகள்

**வினா இலக்கம் 04**

(i). - 02
(ii). - 02
(iii). - 02
(iv). - 02
(v). - 02

Q4 = 10 புள்ளிகள்

**வினா இலக்கம் 05**

(i). - 02
(ii). - 02
(iii). - 02
(iv). - 02
(v). - 02 Q5 = 10 புள்ளிகள்

**வினா இலக்கம் 06**

(i). - 02
(ii). - 02
(iii). - 02
(iv). - 02
(v). - 02 Q6 = 10 புள்ளிகள்

**வினா இலக்கம் 07**
(i). - 02
(ii). - 02
(iii). - 06

Q7 = 10 புள்ளிகள்

## இறுதிப் புள்ளி கணித்தல்

| | | | |
|---|---|---|---|
| பத்திரம் | I | மொத்தம் | 40 புள்ளிகள் |
| பத்திரம் | II | மொத்தம் | 60 புள்ளிகள் |
| | | | 100 புள்ளிகள் |

# ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## අ.පො.ස (සා.පෙළ) විභාගය / க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சை - 2022 (2023)

| විෂය අංකය<br>பாட இலக்கம் | 63 | විෂයය<br>பாடம் | முயற்சியாண்மைக் கற்கை |
|---|---|---|---|

### ලකුණු දීමේ පටිපාටිය / புள்ளி வழங்கும் திட்டம்
### I පත්‍රය / பத்திரம் I

| ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරු අංකය<br>விடை இல. | ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරු අංකය<br>விடை இல. | ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරු අංකය<br>விடை இல. | ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරු අංකය<br>விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 02 | 11. | 03 | 21. | 03 | 31. | 02 |
| 02. | 03 | 12. | 01 | 22. | 04 | 32. | 03 |
| 03. | 03 | 13. | 03 | 23. | 01 | 33. | 01 |
| 04. | 02 | 14. | 04 | 24. | 02 | 34. | 02 |
| 05. | 04 | 15. | 01 | 25. | 02 | 35. | 03 |
| 06. | 03 | 16. | 02 | 26. | 04 | 36. | 04 |
| 07. | 02 | 17. | 04 | 27. | 03 | 37. | 04 |
| 08. | 04 | 18. | 04 | 28. | 01 | 38. | 04 |
| 09. | 02 | 19. | 02 | 29. | 01 | 39. | 01 |
| 10. | 04 | 20. | 01/03 | 30. | 02 | 40. | 02 |

✪ විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට / ஒரு சரியான விடைக்கு 01 ලකුණු බැගින් / புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் $1 \times 40 = 40$

1. பின்வரும் சம்பவக் கற்கையை கவனமாக வாசித்து, (i) தொடக்கம் (x) வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

அஸ்வினி என்பவர் பாடசாலையை விட்டு வெளியேறிய பின்னர், தனது சொந்த வணிகத்தை ஆரம்பிக்கும் எதிர்பார்ப்புடன் பெண்களுக்கான கைப்பையைத் தயாரிக்கும் கற்கைநெறி ஒன்றைப் பின்பற்றினார். தொழிற்சாலையில் அவரது தாய் ஓய்வில்லாமல் பணி புரிவதைக் கண்டு எந்த ஒருவருக்குக் கீழும் தான் வேலை செய்வதில்லை என அவர் தீர்மானித்திருந்தார். தன்னுடன் வேலை செய்யும் சில பெண்கள் எப்பொழுதும் புதிய நவீன பாங்குகளுக்கு (latest style) ஏற்ப தமது கைப்பையை மாற்றுவர் என அஸ்வினியின் தாய் அவருக்குக் கூறினார்.

அஸ்வினி, ஒருநாள் சர்வதேச சந்தைக்கு விரிவுபடுத்தும் எண்ணத்துடன் பெண்களுக்கான கைப்பையை தயாரிக்கும் வணிகத்தை ஆரம்பிக்கத் தீர்மானித்தார். சிற்றளவு முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்காக அரசினால் அறிமுகப்படுத்தப்பட்ட பிரேரிக்கப்பட்ட கடன் செயற்றிட்டத்தின் கீழ் 6% வருடாந்த வட்டியில் ரூ. 500 000 ஐ கடனாக பெற்றுக்கொள்ள அவர் எதிர்பார்த்ததுடன், வணிகத்திற்காக பெற்றோரிடமிருந்து பெற்றுக்கொண்ட ரூ. 200 000 ஐயும் முதலீடு செய்தார். பிரேரித்த தனது வணிகத்திற்காக அஸ்வினி பின்வருவனவற்றை செய்ய எண்ணினார்.

- ஒவ்வொன்றும் ரூ. 75 000 வீதம் இரண்டு இயந்திரங்களை வாங்குதல்.
- ரூ. 25 000 மாதாந்த வாடகையின் கீழ் கட்டடமொன்றைப் பெறுதல்.
- ஒவ்வொருவருக்கும் ரூ. 40 000 மாதாந்த சம்பளத்தை செலுத்துவதன் அடிப்படையில் கைப்பைகளை தயாரிப்பதற்காக இரண்டு ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்தல்.
- ரூ. 100 000 இற்கு மடிக் கணினி ஒன்றை வாங்குதல்.
- துண்டுப் பிரசுரங்கள் மற்றும் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி தனது தயாரிப்புக்களை விளம்பரப்படுத்துவதும், நிகழ்நிலை (online) மூலம் கட்டளைகளைப் பெற்று அவற்றை விற்பனை செய்தலும்.
- தகவல் தொடர்பாடல் தொழினுட்பத்தில் (ICT) சிறந்த அறிவுடைய தனது சகோதரனான ஜனந்தனின் சேவையைப் பெறுவதற்காக அவருக்கு மாதாந்த சம்பளமாக ரூ. 30 000 செலுத்துதல்.

(i) அஸ்வினிக்கு இந்த வணிக எண்ணம் புத்துருவாவதற்குக் காரணமாகவிருந்த **இரண்டு** விடயங்களை எழுதுக.

(ii) சம்பவக் கற்கையைப் பயன்படுத்தி அஸ்வினி பின்வரும் முயற்சியாண்மைக் குணாம்சங்களைக் கொண்டுள்ளாரா என்பதை உறுதிப்படுத்துக.

(அ) சுதந்திரம் (ஆ) எதிர்கால தூரநோக்கு

(iii) அஸ்வினியின் பிரேரிக்கப்பட்ட வணிகத்தின் பலம் ஒன்றையும் வாய்ப்பு ஒன்றையும் குறிப்பிடுக.

(iv) தனது தயாரிப்புக்களை சந்தையில் அறிமுகப்படுத்தும்போது பயன்படுத்துவதற்காக அஸ்வினி எதிர்பார்க்கும் மேம்படுத்தல் முறைகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(v) தனது வணிகத்தின் ஊடாக அஸ்வினி இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்யக்கூடிய வழிகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

- அஸ்வினியின் வணிகத் திட்டத்தில் இருந்து எடுக்கப்பட்ட சில தகவல்கள் கீழே தரப்படுகின்றது.

| | ரூ. |
|---|---|
| **எதிர்பார்க்கப்பட்ட செலவுகள் :** | |
| வணிகத் திட்டம் தயாரித்தல் | 5 000 |
| வணிக பதிவுக் கட்டணம் | 2 500 |
| மூலப்பொருட்கள் மற்றும் உற்பத்திக்கான ஏனைய பொருட்களின் மாதாந்த கொள்வனவு | 125 000 |
| மாதாந்த விளம்பரப்படுத்தல், விற்பனைச் செலவுகள் | 45 000 |
| **எதிர்பார்க்கப்பட்ட வருமானம் :** | |
| மாதாந்த விற்பனை வருமானம் | 450 000 |

**வேண்டப்படுவது :**

அஸ்வினியின் பிரேரிக்கப்பட்ட வணிகத்தின் பின்வருவனவற்றைக் குறிப்பிடுக.

(vi) உடைமையாளரின் முதலீடும் மொத்த நிலையான சொத்துக்களும்

(vii) ஆரம்பிப்பதற்கு முன்னரான செலவுகள்

(viii) மொத்த காசு உள்வருகைகள்

(ix) விற்பனைச் செலவுகளும் நிதிச் செலவுகளும்

(x) முதல் மாதத்தில் மொத்த உற்பத்திக் கிரயத்தை கணிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட இரண்டு செலவுகள் அவற்றின் பெறுமதிகளுடன்

($02 \times 10 = 20$ புள்ளிகள்)

பகுதி II

i. - பெண்களுக்கான கைப்பையைத் தயாரிக்கும் கற்கைநெறியைப் பயின்றமை.
- தாயாரின் ஓய்வின்றிய வேலை.
- பெண்கள் நவீன பாங்குகளுக்கேற்ப கைப்பையை மாற்றுகின்றமை.
- எதிர்கால தூரநோக்கு காணப்பட்டமை (1 x 2 = 2 புள்ளிகள்)

ii. **சுதந்திரம்**

தனது விருப்பிற்கேற்றபடி வேலை செய்வதற்கும் தீர்மானம் எடுப்பதற்கும் ஏற்ற சுய ஊக்கம் காணப்படுவதே சுதந்திரமாகும். எந்தவொருவருக்கு கீமும் தான் வேலை செய்வதில்லை என தீர்மானித்திருந்தமை அஸ்வினி சுதந்திரத்தன்மையைக் கொண்டுள்ளமையை உறுதிப்படுகினறது

**(01 புள்ளி)**

**எதிர்காலத் தூரநோக்கு**

எதிர்காலத்தில் நிறைவேற்றிக்கொள்ள எதிர்பார்க்கும் கனவே எதிர்காலத் தூரநோக்கு எனப்படும். அஸ்வினியும் சொந்த வணிகம் ஒன்றை ஆரம்பிக்கும் நோக்கினைக் கொண்டிருந்ததுடன் ஒரு நாள் சர்வதேச தரத்திற்கு தனது வணிகத்தை விரிவுப்படுத்த எண்ணிருந்தமை அவரிடம் எதிர்கால தூரநோக்கு உள்ளமையை உறுதிப்படுத்துகின்றது.

**(01 புள்ளி)**

iii. பலம்
- அஸ்வினி கற்றுக்கொண்ட கைப்பை தயாரிக்கும் கற்கைநெறி
- பெற்றோரிடமிருந்து கிடைத்த ரூபா 200,000/=
- ICT அறிவுடைய சகோதரனின் சேவை **(1 x 1 = 01 புள்ளி)**

**வாய்ப்பு**
- சிற்றளவு முயற்சியாளர்களை உக்குவிக்கும் முகமாக அரச கடன் திட்டத்தின் கீழ் 6% வருட வட்டியில் கடன் பெற முடிந்தமை
- பெண்கள் நவீன பாங்குகளுக்கேற்ப கைப்பையை மாற்றுகின்றமை. **(1 x 1 = 01 புள்ளி)**

**(மொத்தம் 02 புள்ளிகள்)**

iv. - துண்டுப்பிரசுரம்
- இணையத்தளத்தினூடாக விளம்பரப்படுத்தல்
- சமூக ஊடகங்களினூடாக விளம்பரப்படுத்தல்
- விளம்பரப்படுத்தல் **(1 x 2 = 2 புள்ளிகள்)**

v. - வேலை வாய்ப்புக்களை வழங்குதல்
- சந்தைக்குத் தேவையான உற்பத்திகளை வழங்கல்
- சர்வதேச சந்தைக்கும் பொருட்களை விநியோகித்தல்
- உள்ளூர் வளங்களைப் பயன்படுத்தல்

**(1 x 2 = 2 புள்ளிகள்)**

vi. உரிமையாளர் முதலீடு ரூபா 200,000 **(01 புள்ளி)**

**நிலையான சொத்துக்கள்**

| | | |
|---|---|---|
| இயந்திரங்கள் | 150,000 | 1/2 |
| மடிக் கணினி | 100,000 | 1/2 |
| | 250,000 | **(01 புள்ளி)** |

**(மொத்தம் 02 புள்ளிகள்)**

vii. **வணிகத்தை ஆரம்பிக்க முன்னரான செலவு**

| | | |
|---|---|---|
| வணிகத்திட்டம் தயாரித்தல் | 5000 | (01 புள்ளி) |
| பதிவுக்கட்டணம் | 2500 | (01 புள்ளி) |
| | 7500 | |

**(மொத்தம் 02 புள்ளிகள்)**

viii. **காசு உள்வருகை**

| | | |
|---|---|---|
| வங்கிக் கடன் | 500,000 | 1/2 |
| ஈடுபடுத்திய மூலதனம் | 200,000 | 1/2 |
| விற்பனை வருமானம் | 450,000 | 1/2 |
| | 1,150,000 | 1/2 |

**(நேரடியாக மொத்தத் தொகை இருந்தால் 02 புள்ளிகள் வழங்கவும்)**

**(மொத்தம் 02 புள்ளிகள்)**

ix. **விற்பனைச் செலவும் நிதிச்செலவும்**

| | |
|---|---|
| விளம்பரப்படுத்தல், விற்பனை செலவுகள். | 45000 |
| வட்டிச் செலவு | 2500 |

**(ஏதாவது ஒன்று இருந்தால் 02 புள்ளிகள் வழங்கவும்)**

**(02 புள்ளிகள்)**

x.

| | | |
|---|---|---|
| மூலப்பொருள் கிரயம் | 125000 | **(01 புள்ளி)** |
| கூலிக்கிரயம்(40000 × 2) | 80000 | **(01 புள்ளி)** |

**(மொத்தம் 02 புள்ளிகள்)**

| (i) | (ii) | (iii) | (iv) | (v) | (vi) | (vii) | (viii) | (ix) | (x) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 02/02 | 02/02 | 02/02 | 02/02 | 02/02 | 02/02 | 02/02 | 02/02 | 02/02 | 02/02 | 20/20 |

2. (i) 'முயற்சியாளர்' என்ற பதத்தைச் சுருக்கமாக விளக்குக.
(ii) மனிதத் தேவைகள் மற்றும் விருப்பங்களுக்கிடையிலான வித்தியாசங்கள் இரண்டு தருக.
(iii) 'அக முயற்சியாளர்' என்பதை ஒரு உதாரணம் மூலம் விளக்குக.
(iv) சுந்தரம் என்பவர் உற்பத்தி வணிகம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கின்றார். உற்பத்திக் காரணிகளின் படி அவரது வணிகத்துக்குத் தேவையான வளங்களை வகைப்படுத்துவதுடன், அவை ஒவ்வொன்றுக்கும் உதாரணம் தருக.
(v) ஒரு நாட்டின் விவசாயத் துறை மூலம் தோன்றும் வணிக வாய்ப்புகள் இரண்டு தருக.

**02. (i)** **புதிய வணிகம் சார் எண்ணமொன்றை இனங்கண்டு அதனை ஒரு செயற்பாட்டுக் கருமமாக மாற்றுபவர்**

**அல்லது**

**எண்ணங்களை நடைமுறைப்படுத்துவதற்காகத் திட்டமிடல், சரியான தீர்மானம் எடுத்தல் என்பவற்றினூடாகப் பொருளாதார, சமூக மாற்றங்களை ஏற்படுத்தும் தனிநபரே முயற்சியாளர் ஆவார்**

**அல்லது**

**தூர நோக்கமொன்றை அடிப்படையாகக் கொண்டு நிலம், உழைப்பு, மூலதனம் ஆகிய உற்பத்திக் காரணிகளை ஒருங்கிணைத்து நட்ட இடர்களைப் பொறுப்பேற்றுப் புத்தாக்கம் புரிபவர் முயற்சியாளராவார்.**

**(02 புள்ளிகள்)**

**(ii)**

| தேவை | விருப்பம் |
|---|---|
| மனிதன் வாழ்க்கையினை நடாத்திச் செல்ல கட்டாயமாக நிறைவு செய்ய வேண்டியவை தேவையாகும். | தேவையைப் பூர்த்தி செய்யும் பல்வேறு முறைகளே விருப்பமாகும். |
| ஆரம்பத்தில் உருவாகும் | தேவை உருவான பின்பு விருப்பம் உருவாகும் |
| வரையறுக்கப்பட்டது | ஒரு தேவையை நிறைவு செய்யப் பல்வேறு விருப்பங்கள் காணப்படும் |
| சகலருக்கும் பொதுவானது | தனிநபர்களிடையே விருப்பங்கள் வேறுபடும் |
| பிறப்பிலேயே உருவாகும் | தனிப்பட்டவர்களுக்குத் தேவையானவாறு முயற்சியாளர்களால் / வணிகர்களால் உருவாக்க முடியும். |

**(1 x2= 02 புள்ளிகள்)**

**(iii)** நிறுவனம் ஒன்றில் பணிபுரிபவர்களிடம் காணப்படும் விசேடத்துவம் மிக்க குணாம்சம் பொருந்தியவர் அக முயற்சியாளராவார். இவர் ஏனையவர்களுக்கு/ ஏனைய நிறுவனங்களுக்கு முன்மாதிரியினை பெற்றுக் கொடுக்கும் முறையில் செயற்படுவார்

உதாரணமாக – தர விருது பெற்ற அதிபர்கள்
– பிரதீபா பிரபா விருது பெற்ற ஆசிரியர்கள்

**(விளக்கத்திற்கு 01 புள்ளி , உதாரணத்திற்கு 01 புள்ளி)**
**(மொத்தம் 02 புள்ளிகள்)**

**(iv)**
- நிலம்
- உழைப்பு
- மூலதனம்
- முயற்சி

சுந்தரம் என்பவர் உற்பத்தி வணிகமாக "பாய் பின்னல்" உற்பத்தியினை ஆரம்பிப்பாராயின் அவருக்கு தேவையான வளம் பின்வருமாறு அமையும்
நிலம்–பனைமரம்
உழைப்பு–பாய் பின்னலில் ஈடுபடுகின்ற தொழிலாளர்கள்
மூலதனம்–கருவிகள்/ இயந்திரங்கள் / இடம்
முயற்சியாண்மை– பாய்ப்பின்னல் கைத்தொழில் முயற்சி / சுந்தரத்தின் முயற்சி

சுந்தரம் என்பவர் உற்பத்தி வணிகமாக "மீன் தகரத்தில் அடைத்தல்" உற்பத்தியினை ஆரம்பிப்பாராயின் அவருக்கு தேவையான வளம் பின்வருமாறு அமையும்
நிலம்–கடல்வளம்
உழைப்பு– மீன்பிடி தொழிலாளர்
மூலதனம்–கருவிகள்/ இயந்திரங்கள்/ வள்ளம்
முயற்சியாண்மை– மீன் தகரத்தில் அடைத்தல் / சுந்தரத்தின் முயற்சி

*** வேறு பொருத்தமான விடைகள்**

**(உற்பத்திக் காரணிக்கு 01 புள்ளி , உதாரணத்திற்கு 01 புள்ளி)**
**(மொத்தம் 02 புள்ளிகள்)**

**(v) விவசாயத் துறை - வணிக வாய்ப்புக்கள்**
- விவசாய நடவடிக்கை
- சுற்றுலா கைத்தொழில்
- ஆயுர்வேத மருத்துவத்துறை
- ஓகானிக் முறையிலான பழச்செய்கை
- சேதனப் பசளை உற்பத்திகள்
- பல்லின அரிசிவகை
- வாசனைத்திரவியங்கள்
- பழப்பானம்
- பதப்படுத்தப்பட்ட பழம்
- மலர்செய்கை
- மலர் வளையம், அலங்காரமாலை

*** வேறு பொருத்தமான விடைகள்**

**(1x 2 = 02 புள்ளிகள்)**

Q2

| (i) | (ii) | (iii) | (iv) | (v) | |
|---|---|---|---|---|---|
| 2/2 | 2/2 | 2/2 | 2/2 | 2/2 | 10/10 |

3. (i) முயற்சியாளர் ஒருவரால் பெற்றுக்கொள்ளக்கூடிய சமூக அனுகூலங்கள் இரண்டு தருக.
(ii) முயற்சியாளர் ஒருவர் தலைவர், முகாமையாளர் ஆகிய வகிபாகங்களில் நிறைவேற்றுகின்ற ஒவ்வொரு தொழிற்பாடு வீதம் தருக.
(iii) தற்போது இலங்கையின் முயற்சியாளர் ஒருவர் சமூக நலன் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்யக்கூடிய வாய்ப்புக்களுக்கான இரண்டு உதாரணங்கள் தருக.
(iv) ஒரு நாட்டின் உள்ளூர் பொருளாதார அபிவிருத்திக்காக முயற்சியாளர் பங்களிப்புச் செய்யக்கூடிய இரண்டு வழிகளை எழுதுக.
(v) ஊழியரிலும் பார்க்க முயற்சியாளராக இருப்பதால் பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் இரண்டு தருக.

03. (i) **முயற்சியாளர் ஒருவர் பெறக்கூடிய சமூக அனுகூலங்கள்**

1. புகழும் பாராட்டும் கிடைக்கும்
2. தலைமைத்துவம் கிடைக்கும்
3. ஆத்ம திருப்தி கிடைக்கும்.
4. சமூக அந்தஸ்து உயர்வடையும் / சமூக அங்கீகாரம் கிடைக்கும்.
5. தமது பணிசார் நன்மதிப்பு அதிகரிக்கும்
6. வணிகம் நீண்டகாலம் நிலைத்திருக்க கூடிய நிலைமை உருவாகும்
7. சட்டப்படி பிரச்சினைகள் குறைவடையும்

(1x 2 = 02 புள்ளிகள்)

(ii) தலைவர்

- ஊழியர்களை ஊக்கப்படுத்தலும் தேவையான வழிகாட்டலை வழங்கலும்
- வேலைகளில் ஈடுபடும் போது ஊழியர்களுக்கு வழிகாட்டுதல்

(1x 1 = 01 புள்ளி)

முகாமையாளர்

- வணிகத்திட்டத்தினை தயாரித்தல்
- திட்டத்திற்கேற்ப நடவடிக்கைகள் இடம்பெறுகின்றதா என தேடிப்பார்த்தல்

(1x 1 = 01 புள்ளி)

(மொத்தம் 02 புள்ளிகள்)

(iii)
- வீடற்றோருக்கு வீடு அமைத்துக் கொடுத்தல்
- வருமானம் குறைந்த குடும்ப சிறார்களின் கல்விக்கு உதவுதல்
- பிள்ளைகளிற்கு புலமைப் பரிசில் வழங்கல்
- தொழில்களை பெற்றுக் கொடுத்தல்
- பின்தங்கிய கிராமவாசிகளுக்கு மலசலகூட வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்
- குடிநீர் பிரச்சினையை எதிர்கொள்வோருக்கு சுத்தமான குடிநீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்

* **வேறு பொருத்தமான விடைகள்**

( 1x2 = 02 புள்ளிகள்)

**(iv)**
- தொழில் வாய்ப்புக்களை வழங்குதல்
- தேசிய வளங்களைப் பயன்பாட்டிற்கு உட்படுத்தல்
- புதிய பொருட்கள் சேவைகளை சந்தைக்கு அறிமுகப்படுத்தல்
- நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியினை அதிகரித்தல்
- வருமான ஏற்றத்தாழ்வை இழிவுபடுத்தல்

* **வேறு பொருத்தமான விடைகள்**

**( 1x2 = 02 புள்ளிகள் )**

**(v)** முயற்சியாளர் -
- உற்பத்தித் தீர்மானங்களை மேற்கொண்டு சுதந்திரமாக வணிகத்தை நடாத்திச்செல்ல முடியும்
- வெகுமதியான இலாபம் என்ற வருவாயினை பெறுவார்
- தீர்மானமொன்று மேற்கொள்வதற்காக யாரிலும் தங்கியிருக்க வேண்டிய அவசியமில்லை
- இலாபத்தில் இருந்து சமூகநலனுக்காக பங்களிக்கக்கூடிய இயலுமை காணப்படும்

* **வேறு பொருத்தமான விடைகள்**

**( 1x2 = 02 புள்ளிகள் )**

Q3

| (i) | (ii) | (iii) | (iv) | (v) | |
|---|---|---|---|---|---|
| $\frac{2}{2}$ | $\frac{2}{2}$ | $\frac{2}{2}$ | $\frac{2}{2}$ | $\frac{2}{2}$ | $\frac{10}{10}$ |

4. (i) வணிகத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் முயற்சியாளர் ஒருவர் எடுக்க வேண்டிய முக்கிய தீர்மானங்கள் இரண்டு தருக.

(ii) சரிதா என்பவர் துணிகளைச் சலவை செய்வதற்கான சலவைத் தூளை உற்பத்தி செய்து விநியோகிக்கும் வணிகம் ஒன்றை ஆரம்பிப்பதற்குத் தீர்மானித்தார். இங்கு சரிதா கருத்திற்கொள்ளவேண்டிய இரண்டு காரணிகளைக் குறிப்பிடுக.

(iii) சந்தைக்கு வழங்கும் உற்பத்திப்பொருளொன்றின் வெற்றிகரமான விற்பனையில் தாக்கம் செலுத்தும் இரண்டு காரணிகளை எழுதுக.

(iv) வணிகங்கள் இரண்டைப் பெயரிட்டு, அவற்றுக்கு மிகவும் பொருத்தமான இடம் மற்றும் வாடிக்கையாளர் குழு ஆகியவற்றைக் குறிப்பிடுக.

(v) வெகுஜன ஊடகங்கள் மூலம் வணிக எண்ணங்கள் புத்துருவாதல் ஒரு பொதுவான சூழ்நிலை ஆகும். இதற்கு இரண்டு உதாரணங்கள் தருக.

i.
- வணிகத்துக்கு எவ்வகையில் அர்ப்பணிக்க முடியும்?
- வணிகத்திற்கு அடிப்படையான பொருள்/சேவை எது?
- இலக்கிற்குட்பட்ட நுகர்வோர் யார்?
- போட்டி நிலைமைகள் எவ்வாறானது?
- வருமானம் போதுமானதா?
- மூலதனத்தைப் பெறுவது எவ்வாறு?
- வணிகத்தை ஆரம்பிப்பது தனியாகவா/ கூட்டாகவா?
- வணிகத்திற்கு பொருத்தமான இடம் எது?
- வணிகத்தினூடாக சமூகத்திற்கு எவ்வகையான பிரதிபலன்களைப் பெற்றுக் கொடுக்க முடியும்?

**மேற்கூறிய விடயங்கள் தொடர்பாக தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும்**

**(1x 2 = 02 புள்ளிகள்)**

ii.
- இலக்கு வாடிக்கையாளர்
- போட்டடியாளர்கள்
- சட்டத் தேவைப்பாடுகள்
- மூலதனத்தை எவ்வாறு பெறல்
- ஆரம்பிக்கும் இடம்
- மூலதனம் பெறுவது எப்படி

*** வேறு பொருத்தமான விடைகள்**

**(1x 2 = 02 புள்ளிகள்)**

iii.
1. உற்பத்தி
2. விலை
3. இடம்
4. மேம்படுத்தல்

*** இவற்றுக்கான உதாரணங்கள்**

**(1x 2 = 02 புள்ளிகள்)**

iv.

| வணிகம் | பொருத்தமான இடம் | வாடிக்கையாளர் |
|---|---|---|
| புத்தகசாலை | போக்குவரத்து வசதியும் வாகனத்தரிப்பிடமும் உள்ள இடம் | மாணவர் ஆசிரியர் **(01 புள்ளி)** |
| ஆடை விற்பனை நிலையம் | காட்சியறை வசதியும் சனப்புழக்கமும் உள்ள இடம் | பெண்கள் இளைஞர்கள் **(01 புள்ளி)** |

*** ஏனைய பொருத்தமான விடைகள்**

**(வணிகத்தின் பெயர் கட்டாயம் குறிப்பிடல் வேண்டும் அதற்கு 1/2 புள்ளி வழங்கவும்)**

**(மொத்தம் 02 புள்ளிகள்)**

V. • வெகுஜன ஊடகங்களில் பொழுதுபோக்கு விருப்பத்திற்காக பார்க்கும் காட்சிகளினூடாக வணிக எண்ணம் உருவாகும்.

உதரணமாக – மலர்ச்செய்கை
மீன்வளர்ப்பு
புகைப்படம் பிடித்தல்

• வெகுஜன ஊடகங்களில் பார்க்கும் கண்காட்சிகளின் அனுபவத்தினூடாக வணிக எண்ணம் உருவாகும்.

**(1x 2 = 02 புள்ளிகள் )**

Q4

| (i) | (ii) | (iii) | (iv) | (v) | |
|---|---|---|---|---|---|
| 2/2 | 2/2 | 2/2 | 2/2 | 2/2 | 10/10 |

**5.** (i) தனியுடைமை வணிகம், பங்குடைமை வணிகம் ஆகியவற்றின் பொதுவான குணாம்சங்கள் **இரண்டு** எழுதுக.

(ii) பங்குடைமை உடன்படிக்கையால் தீர்க்கக்கூடிய வகையில் பங்குடைமையில் உருவாகும் நடைமுறைப் பிரச்சினைகள் **இரண்டு** தருக.

(iii) 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின்படி வரையறுத்த தனியார் கம்பனி ஒன்றின் பெயரைத் தெரிவுசெய்யும்போது **பயன்படுத்தப்படாத இரண்டு** பெயர்களை எழுதுக.

(iv) கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளில் காணக்கூடிய அடிப்படைக் குணாம்சங்கள் **இரண்டு** எழுதுக.

(v) தனியுடைமை வணிகம் மற்றும் வரையறுத்த தனியார் கம்பனி தொடர்பில் பின்வருவன பற்றி முறையே எழுதுக.

(அ) ஆகக்குறைந்த அங்கத்தவர் எண்ணிக்கை

(ஆ) உடைமையாளரின் பொறுப்பு

**(i)**
- பொறுப்புக்கள் வரையறுக்கப்படாமை
- நிலைத்தியங்கும் தன்மை காணப்படாமை
- சட்ட ஆளுமை காணப்படாமை
- பதிவு செய்யவேண்டிய கட்டாயமில்லை

**(1 x 2 = 02 புள்ளிகள்)**

**(ii)**
- பங்காளர் இலாப நட்டங்களை பகிரும் போது தோன்றக்கூடிய பிரச்சினைகள்
- பங்குடமை வணிகத்தின் செயற்பாடுகளில் யார் யார் ஈடுபடுதல் வேண்டும் என்பது தொடர்பிலான பிரச்சினைகள்
- பங்குடமை வணிகத்தை நடாத்திச்செல்லும் விதம் தொடர்பில் ஏற்படக்கூடிய கருத்து பேதங்கள்
- பங்குடமை வணிகத்தை கலைப்பது தொடர்பிலான உடன்பாடின்மை.

* **ஏனைய பொருத்தமான விடைகள்**

**(1 x 2 = 02 புள்ளிகள்)**

**(iii)**
- தற்போது பாவனையிலுள்ள பெயர்கள் / அதற்கு நெருக்கமான பெயர்கள்
- இலங்கை எனும் சொல்லைப் பயன்படுத்த முடியாது
- அரசு எனும் சொல்லைப் பயன்படுத்த முடியாது
- ஜனாதிபதி எனும் சொல்லைப் பயன்படுத்த முடியாது

**( 1x2 = 02 புள்ளிகள்)**

**(iv) கூட்டிணைக்கப்பட்ட கம்பனியின் பண்புகள்**
- 2007ம் ஆண்டு 7ம் இலக்க சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கபட்டதாக இருத்தல்
- பங்குதாரர் மூலம் மூலதனம் இடல்
- பங்குதாரரின் பொறுப்புக்கள் வரையறுக்கப்பட்டதாக இருத்தல்
- கம்பனியின் நிர்வாக நடவடிக்கைகள் இயக்குனர் சபையினால் மேற்கொள்ளப்படல்
- நீடித்துழைக்கும் தன்மை காணப்படல்
- சட்ட ஆளுமை காணப்படல்

**(1x2 = 02 புள்ளிகள்)**

(v)

| விடயம் | தனியுடமை வணிகம் | தனியார் கம்பனி |
|---|---|---|
| அங்கத்தவர் எண்ணிக்கை | தனியொருவர் | ஆகக் குறைந்தது ஒருவர் (01 புள்ளி) |
| உடைமையாளரின் பொறுப்பு | வரையறுக்கப்படாதிருத்தல் | வரையறுக்கப்பட்டிருத்தல் (01 புள்ளி) |

(மொத்தம் 02 புள்ளிகள்)

Q5

| (i) | (ii) | (iii) | (iv) | (v) | |
|---|---|---|---|---|---|
| $\frac{2}{2}$ | $\frac{2}{2}$ | $\frac{2}{2}$ | $\frac{2}{2}$ | $\frac{2}{2}$ | $\frac{10}{10}$ |

**6.** (i) இலங்கையில் முயற்சியாண்மையினை ஊக்கப்படுத்தும் நிறுவகங்கள் **இரண்டினை** எழுதுக.

(ii) முயற்சியாண்மைக்குத் தடையாக உள்ள சமூகக் காரணிகள் **இரண்டு** தருக.

(iii) பெண்கள் முயற்சியாண்மைக்கான தடைகள் **இரண்டு** தருக.

(iv) ஒரு நாட்டில் முயற்சியாண்மைக் கலாசாரத்தை உருவாக்குவதற்கான தேவையை நியாயப்படுத்துவதற்கான **நான்கு** காரணிகளை எழுதுக.

(v) ஒரு நாட்டில் முயற்சியாண்மை கலாசாரத்தை உருவாக்கும்போது அதன் வேலைப்படைக்கு வேலையை வழங்கக்கூடிய வகையில் தற்போதைய வேலையின்மையின் தன்மை பற்றிக் கற்றுக்கொள்ள வேண்டும். இலங்கையின் தற்போதைய வேலையின்மையின் தன்மைகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

**(i)**
- தேசிய வணிக வங்கிகள்
- வணிக வங்கியில்லாத ஏனைய நிதி நிறுவனங்கள்
- DFCC வங்கி
- RDB (பிரதேச அபிவிருத்தி வங்கி)
- பிரதேச செயலகம்
- கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம்
- இலங்கைத்தர நிறுவனம்
- கைத்தொழில் அபிவிருத்திச் சபை
- இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை

**(1x2 = 02 புள்ளிகள்)**

**(ii) முயற்சியாண்மைக்கு தடையாகவுள்ள சமூகக் காரணிகள்**
- சம்பளம் பெறுகின்ற தொழில்களிற்கு சமூகத்தில் அதிக வரவேற்பு கிடைக்கின்றமை
- சவால்களுக்கு முகங்கொடுப்பதிலுள்ள பயம்
- ஆபத்துக்களைப் பொறுப்பேற்க விரும்பாமை
- கல்வியினூடாக வழிகாட்டல் வழங்கப்படும் அளவு போதாமை
- அரச அனுசரணை போதியளவு கிடைக்கப்பெறாமை
- தங்கிவாழும் மனோநிலை
- அரசாங்க உத்தியோகத்தை பெரிதும் கௌரவமாக நினைக்கின்றமை

**(1x2 = 02 புள்ளிகள்)**

**(iii) பெண் முயற்சியாண்மைக்கான தடைகள்**
- தனிப்பட்ட வாழ்க்கை முறையையும் முயற்சியாண்மை வகிபாகத்தையும் சரிசமமாக நடாத்திச்செல்வதிலுள்ள சவால்கள்
- பெண்கள் தமது குடும்ப வாழ்க்கைக்கு முன்னுரிமை வழங்க நேரிடுவதால் வணிகத்தின் மீதான கவனம் குறைவடைதல்
- பெண்களுக்கு சமூகத்தில் சுயஉரிமைகள் இன்னும் வழங்கப்படாமை
- சம்பிரதாய மரபுகளை மீறி வணிகங்களை மேற்கொள்ள விரும்பாமை
- பெண்களுக்கான முயற்சியாண்மை வேலைத்திட்டங்கள் போதியளவு இல்லாமை
- மூலதனத்தை பெறுவதிலுள்ள சிரமம்

**(1x2 = 02 புள்ளிகள்**

(iv)
- வேலையில்லாப் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டியுள்ளமை
- பொருளாதார வளர்ச்சியை எட்டவேண்டியதாயிருத்தல்
- பயன்படுத்தப்படாத வளங்களை பயன்பாட்டிற்கு கொண்டுவர
- புதிய தொழில் வழங்குனர்களை உருவாக்க வேண்டிள்ளமை
- வருமானப்பகிர்வு ஏற்றத்தாழ்வினை குறைக்க வேண்டியிருத்தல்

**(1x2 = 02 புள்ளிகள்)**

(v)
- கல்விகற்றோரிடையே உயர் வேலையின்மை நிலவுகின்றது
- இளைஞர்களிடையே (30 வயதிற்கு குறைந்தோர்) உயர் வேலையின்மை நிலவுகின்றது
- கல்விகற்ற பெண்கள் மத்தியில் வேலையின்மை நிலவுகின்றது
- தொழில்களுக்காக வெளிநாடு செல்கின்றமை

**(1x2 = 02 புள்ளிகள்)**

Q6

| (i) | (ii) | (iii) | (iv) | (v) | |
|---|---|---|---|---|---|
| 2/2 | 2/2 | 2/2 | 2/2 | 2/2 | 10/10 |

**7.** (i) சந்தைப் பகுப்பாய்வின்போது கருத்திற்கொள்ள வேண்டிய காரணிகள் **இரண்டினை** எழுதுக.
(02 புள்ளிகள்)

(ii) பாடசாலை ஒன்றின் நிர்வாகத் திட்டத்தில் உள்ளடங்கியுள்ள பதவிநிலைகள் **நான்கு** தருக.
(02 புள்ளிகள்)

(iii) சுபயானின் பிரேரித்த வணிகத்தின் முதல் மாதத்திற்கான மதிப்பிடப்பட்ட காசு உள்வருகை, காசு வெளிச்செலுத்துகை என்பன கீழே தரப்பட்டுள்ளது.

| | ரூ. |
|---|---|
| உடைமையாளர் முதலீடு ........................................ | 200 000 |
| எதிர்பார்க்கப்பட்ட விற்பனை வருமானம் ............... | 300 000 |
| விற்பனைக்காக வாங்கிய பொருட்கள் ................... | 150 000 |
| செலுத்திய கட்டட வாடகை ................................... | 25 000 |
| சம்பளங்களும் ஏனைய செலவுகளும் .................. | 75 000 |
| வணிகத்துக்காக வாங்கிய தளபாடங்கள் .............. | 200 000 |

**வேண்டப்படுவது:**

சுபயானின் பிரேரித்த வணிகத்தின் முதல் மாதத்திற்கான மதிப்பிடப்பட்ட காசுப் பாய்ச்சற் கூற்றை தயாரித்து, மொத்தக் காசு உள்வருகை, மொத்தக் காசு வெளிச்செலுத்துகை, காலப்பகுதியின் முடிவில் உள்ள காசு மீதி ஆகியவற்றைக் குறிப்பிடுக.

(i)
- சந்தைப்படுத்தவுள்ள பொருள் அல்லது சேவைக்கு உள்ள கேள்வி
- இலக்கு வாடிக்கையாளர்கள்
- போட்டியாளர்கள்

* **வேறு பொருத்தமான விடைகள்**

**(1x2 = 02 புள்ளிகள்)**

(ii)
- அதிபர்
- பிரதி அதிபர்
- உப அதிபர்
- பகுதித் தலைவர்கள்
- தர இணைப்பாளர்கள்
- வகுப்பாசிரியர்கள்
- பாட ஆசிரியர்கள்
- பாட இணைப்பாளர்கள்

**(1x2 = 02 புள்ளிகள்)**

[ Downloaded from Past Papers Wiki - Most Extensive Wikipedia of Past Papers! ]

**(iii)**

சுபயானின் வணிகத்தின்

முதல் மாதத்திற்கான மதிப்பிடப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்று (1/2)

| விபரம் | ரூபா | ரூபா |
|---|---|---|
| **காசு உட்பாய்ச்சல்** (1/2) | | |
| உடைமையாளர் முதலீடு | 200,000 (1/2) | |
| விற்பனை வருமானம் | 300,000 (1/2) | |
| மொத்தக் காசு உட்பாய்ச்சல் | | 500,000 (1/2) |
| **காசு வெளிபாய்ச்சல்** (1/2) | | |
| விற்பனைக்காக வாங்கிய பொருட்கள் | 150,000 (1/2) | |
| கட்டட வாடகை | 25,000 (1/2) | |
| சம்பளங்களும் ஏனைய செலவுகளும் | 75,000 (1/2) | |
| தளபாடக் கொள்வனவு | 200,000 (1/2) | |
| மொத்தக் காசு வெளிப்பாய்ச்சல் | | 450,000 (1/2) |
| முதல் மாதத்திற்கான இறுதிக் காசு மீதி | | 50,000 (1/2) |

**(மொத்தம் 06 புள்ளிகள்)**

Q7

| (i) | (ii) | (iii) | |
|---|---|---|---|
| 2/2 | 2/2 | 6/6 | 10/10 |

PAST PAPERS WIKI

WWW.PastPapers.WiKi



[ Downloaded from Past Papers Wiki - Most Extensive Wikipedia of Past Papers! ]

LOL.lk
BookStore

# විභාග ඉලක්ක පහසුවෙන් ජයගන්න

ඕනෑම පොතක් ඉක්මනින්
නිවසටම ගෙන්වා ගන්න





කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර |
A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත් |
School Book ගුරු අතපොත්

PADANAMA PUBLICATION | pesuru Prakashana Private Ltd. | Akura Pilot | සමනල දැනුම | T | සුභාර

පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා

**සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට**

**www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න**